# 6. இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்களுக்கு முக்கியப் பிரச்சினைகளை எழுப்ப வாய்ப்பளித்தல்—பேரவைத் தலைவரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சட்டமன்றப் பேரவையில் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தாங்கள் கொடுக்கும் கவன ஈர்ப்புகள் அவையில் விவாதிக்க அனுமதிக்கப்படுவதில்லை என்று மீண்டும், மீண்டும் கூறி வருகின்றனர். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைப் பொறுத்தவரையில், அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புகளில், அதிகமான அளவில் சிறப்புக் கவன ஈர்ப்பாக அவையில் எழுப்பப்பட்டு, அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதிலளித்துள்ளார்கள். மேலும், தினமும் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்புகள் குறித்து அவையில் எழுப்ப அனுமதி அளித்துள்ளேன்.*

*உதாரணமாக, கர்நாடக மாநிலத்திலிருந்து தண்ணீர் வரும் பிரச்சினை குறித்தும், மண்ணெண்ணெய் கட்டுப்பாடு குறித்தும், பன்றிக் காய்ச்சல் நோயால் தமிழகத்தில் ஏற்பட்ட பாதிப்பு குறித்தும், இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டது குறித்தும் மற்றும் பல்வேறு முக்கிய அறிவிப்புகள் அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், உறுப்பினர்கள் கொடுத்துள்ள ஒரு சில அறிவிப்புகள் குறித்து, அவர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போதும் பேசுகின்றனர். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதிலளித்துள்ளார்கள். இன்னும் ஒரு சில அறிவிப்புகள் குறித்து மாண்புமிகு அமைச்சர்கள் பதிலளிக்கத் தயாராக இருக்கும்பட்சத்தில் நேரம் இருக்குமானால், அவற்றினை எடுக்கவும் தயாராக இருக்கிறேன்.*

*இன்றையதினம் மூன்று அமைச்சர்கள் பதிலுரை வழங்க வேண்டியிருப்பதால், அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து நாளை எடுத்துக்கொள்ளலாம் என திரும்பத் திரும்பக் கூறிய பின்னரும், அவர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர். நேரத்தின் அருமை கருதி, இன்று கவன ஈர்ப்புகள் எடுக்க இயலவில்லை. எனவே, இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் வேண்டுமென்றே இன்று அவையிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*